அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கை இல : 02/2014

எனது இல: HAF-1/04/N/01
அரசாங்க நிர்வாக மற்றும்
உள்நாட்டலுவல்கள் அமைச்சு
சுதந்திர சதுக்கம்
கொழும்பு 07
2014.03. 12

அமைச்சின் செயலாளர்கள்
மாகாணப் பிரதம செயலாளர்கள்
திணைக்களத் தலைவர்கள்
மாவட்டச் செயலாளர்கள் / அரசாங்க அதிபர்கள்
பிரதேச செயலாளர்கள்

<u>நொத்தாரிசு பதவியில் ஈடுபடல்</u>

தாபன விதிக்கோவையின் அத்தியாயம் XXX இன் உட்பிரிவு 1:4 இன்பால் தங்களின் கவனம் ஈர்க்கப்படுகின்றது.

02. கூறப்பட்ட ஏற்பாடுகளுக்கமைய, மாவட்ட மற்றும் பிரதேச நிர்வாக சேவையில் சேவையாற்றும் அலுவலர்களுக்கு அலுவலக நேரத்திற்குப் பின்னர் நொத்தாரிசுப் பதவியில் ஈடுபடுவதற்கு என்னால் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

03. காணிகளுடன் தொடர்புபட்ட செயற்பாடுகள் இவ் அலுவலர்களின் நோக்கெல்லையுடன் தொடர்புபடுவதனால் நொத்தாரிசுத் தொழிலில் ஈடுபடல் அத்தகைய அலுவலர்களுக்கு பொருத்தமானதன்று என்னும் நோக்கில் பல்வேறுபட்ட பிரதிநிதித்துவக் கருத்துக்கள் என்னிடம் விடுக்கப்பட்டுள்ளன. ஆதலினால், மாவட்ட மற்றும் பிரதேச நிர்வாக சேவையில் சேவையாற்றும் அலுவலர்கள் இச் சுற்றறிக்கை வெளியிடப்பட்ட திகதியிலிருந்து நொத்தாரிசுப் பதவியில் ஈடுபடலாகாது.

04. ஆதலினால் மாவட்ட மற்றும் பிரதேச நிர்வாகத்தில் அத்தகைய அலுவலர்கள் வகிக்கும் பதவிகளில் மேலும் தொடர்ந்திருக்க அவர்கள் விரும்பினால் மேற்படி பதவிகளை வகிக்கும் போது நொத்தாரிசு பதவியில் அவர்கள் ஈடுபடக்கூடாது என்பதுடன் அவர்கள் நொத்தாரிசு பதவியில் தொடர்ச்சியாக ஈடுபட விரும்பினால் பிரதேச / மாவட்ட நிர்வாகத்திலுள்ள கடமைகளிலிருந்து நீங்கி வேறொரு சேவை நிலையத்துக்கு இடமாற்றம் ஒன்றை அத்தகைய அலுவலர்கள் பெற்றுக்கொள்ள வேண்டும் என்றும் இத்தால் வலியுறுத்தப்படுகின்றது.

05. அவர்களின் கடமைகளுக்கு தடை எதுவும் ஏற்படா வண்ணம் அலுவலக நேரத்திற்குப் பின்னர் அவர்களது பிரிவுக்கு வெளியே நொத்தாரிசு பதவியில் ஈடுபடுவதற்கு காணிகள் தொடர்புபட்ட கடமைகளை ஏற்கனவே நிறைவேற்றிவரும் அலுவலர்களுக்கு வழங்கப்பட்ட அனுமதியானது இச் சுற்றறிக்கை வெளியிடப்பட்ட திகதியிலிருந்து அமுலில் இருக்கும் வண்ணம் இத்தால் இரத்துச் செய்யப்படுகின்றது. மேலும், காணிகளுடன் தொடர்புற்ற கடமைகளை நிறைவேற்றாத ஆனால் மேற்படி விதத்தில் அனுமதி வழங்கப்பட்டுள்ள யாரேனுமோர் அலுவலர், அத்தகைய அலுவலர் காணிகள் தொடர்பான கடமைகளுடன் தொடர்புபட்ட பதவி ஒன்றில் நியமிக்கப்படின் நொத்தாரிசு பதவியில் ஈடுபடுவதிலிருந்து தவிர்ந்து கொள்ள வேண்டும் என்பதுடன் இவ் அமைச்சுக்கு / உரிய அமைச்சின் செயலாளருக்கு இது குறித்து தெரியப்படுத்துதல் வேண்டும்.

ஒப்பம்/ பி.பீ. அபேகோன்
செயலாளர்
அரசாங்க நிர்வாக மற்றும் உள்நாட்டலுவல்கள் அமைச்சு